ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1711/24 - 2011 ජුනි 24 වැනි සිකුරාදා - 2011.06.24

*1711/24 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்செலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றாகக் கருதப்பட்டதான கட்டளையாகிய இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைத் தாபிக்கும் கட்டளையை, (2010, யூன் 17 ஆந் திகதிய 1658/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) அதற்கான அட்டவணையில் “பீடம்” என்னும் தலைப்பின் கீழுள்ள I நிரலில் காணப்படும் “கலைப்பீடம்” என்னும் விடயத்திற்கு அத்தகைய கருதப்பட்ட கட்டளைக்கான அட்டவணையின் “துறைகள்” என்னும் தலைப்பின் கீழுள்ள II நிரலில் காணப்படும் அத்தகைய விடயத்திற்கு நேரொத்தவாறான எல்லா விடயத்திற்கும் பதிலாகப் பின்வரும் புதிய விடயத்தினை இடுவதன்மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :-

**“அட்டவணை**

| “நிரல் I | நிரல் II |
|---|---|
| பீடம் | துறைகள் |
| மானிடவியல்கள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம் | 1. பொருளியல் துறை<br>2. சமூக புள்ளிவிபரவியல் துறை<br>3. புவியியல் துறை<br>4. சிங்களம், மக்கள் தொடர்பாடல் துறை<br>5. சரித்திரம் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை<br>6. சமூகவியல், சமூக மானிடவியல் துறை<br>7. பாளி பௌத்த கற்கைகள் துறை |

"**அட்டவணை** (தொடர்ச்சி)

8. மொழிகள், கலாச்சார கற்கைகள் துறை
9. ஆங்கிலத் துறை
10. அரசியல் விஞ்ஞானத் துறை

திசாநாயக்க முதியான்செலாகே
சுமணவீர பண்டா திசாநாயக்க,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2011, யூன் 21.

7 - 239/3